முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.08.2023**, செவ்வாய்கிழமை

1. மாதருமம் உலகெலாம் நிரம்பிட
மகத்துவம் அருளுகின்ற ஞானியே
பூதலத்தில் உலக மக்களெல்லாம்
புண்ணிய வான்கள் ஆக வேண்டி
2. வேண்டியே தருமசாலை அமைத்து
வேலவன் அம்சமாக வந்தருளி
தொண்டர்களை படைக்கும் தவசியே
தேசிகனே உன் பெருமை கூறி
3. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
குறைவிலா மூவையோர்திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 16ம் நாள், 01.08.2023, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க பிங்களமுனிவர் யானும்
4. யானும் உலகநலமுற உரைப்பேன்
உலகம் உயர்வு பெற வேண்டி
ஞானபண்டிதன் சக்தியாகவே
ஞானம் அருளுகின்ற ஞானியே
5. ஞானியே உன் சன்மார்க்கமதும்
நம்பிக்கைபட மக்களிடை வளர
ஞானிகள் கூட்டம் அனைத்தும்
நல்கியே ஆசிதனை அருளி
6. அருளியே அரங்கன் சீடர்களான
அனைவருக்கும் ஞான பலம்
வரமாகத் தந்தருளி நிற்பர்
வளமான வாழ்வாக மாறி

7. மாறியே கலியின் கொடுமைகள்
மண்டியிட்டு வணங்கி ஓடிட
ஆறுமுகனார் வெளிப்பட மாற்றம்
அகிலமதும் கண்டுத் தேறும்
8. தேறவே தீவினை சக்திகள்
தேய்ந்து ஓய்ந்து தேசம்விட்டு
மாறுவர் நல்வினை கொண்ட
மாந்தர்களாய் நன்மக்களாய்
9. மக்களிடை அற்புதம் நடத்தி
மகான் அரங்கன் வந்த
நோக்கம் வெற்றி காணும்
நிலவுலகே ஞானலோகமாகும்
10. ஆகவே அரங்கனை நோக்கி
அன்பர்கள் அனுகி வந்து
வகைபட தீட்சை ஏற்று
வரம் தா நல் வாழ்வு தா என
11. என வேண்டித் தொடர
எல்லாம் சரியாகுமப்பா
ஞானபலமாகி வாழ்வினில்
ஞானிகள் தொடர்பு கூடுமப்பா
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—